# இலங்கை முஸ்லிம்களிடையே உளப் பரிசுத்தத்தினூடாக ஆத்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் ஸூபி தரீக்காக்களின் பங்களிப்பு : மட்டக்களப்பு மாவட்டத்தில் ஷாதுலிய்யா தரீக்காவின் பணிகள் பற்றிய ஓர் ஆய்வு

ஏ. ஜ.்.பர் ஹுஸைன்,
இஸ்லாமிய கற்கைகள் துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
hussainaj@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கை பல்லின, பல மொழி பேசுகின்ற பல்வேறு சமய, கலாசார பாரம்பரியங்களைக் கொண்ட ஒரு நாடாகும். அரேபியர் இஸலாத்திற்கு முற்பட்ட காலம் முதலே இலங்கையுடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தன் காரணமாக அரேபியாவில் இஸ்லாம் தோன்றிய ஆரம்ப காலப்பிரிவிலேயே இலங்கையிலும் இஸ்லாம் அறிமுகமாகியுள்ளது. ஐரோப்பியர் வருகை முதல் அரேபியருடனிருந்த நெருக்கமான தொடர்பு வெகுவாகக் குறைந்ததாலும் இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலையங்கள் போர்த்துக்கல், ஒல்லாந்த ஆட்சியாளர்களின் கொடுமைகளால் பாதிக்கப்பட்டதாலும் சமய, கலாசார முன்னேற்றம் தடைப்பட்டு முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சி குன்றியது. இலங்கை முஸ்லிம்கள் பௌத்த, இந்து கலாசாரப் பாரம்பரியங்களைப் பின்பற்றி வாழும் மக்களிடையே வாழ்ந்து வருவதால் அக்கலாசாரங்களின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர். மேலும் இவர்கள் பரம்பரை பரம்பரையாக இஸ்லாத்தைப் பின்பற்றி வருகின்ற போதிலும், கல்வித் துறையில் பின்னடைந்திருப்பதால் இஸ்லாம் மார்க்கத்தைத் தெளிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பை இழந்துள்ளனர். இதனால் இஸ்லாத்துக்கு மாற்றமான சடங்குகள், சம்பிரதாயங்களை இஸ்லாமாகக் கருதி பின்பற்றும் சூழ்நிலையும் உருவாகியது. மார்க்க வழிகாட்டல்கள் உரிய முறையில் கிடைக்காததால் ஆன்மீகத் துறையைப் புறக்கணித்து, லௌகீகத் துறையை இலட்சியமாகக் கொண்டு வாழும் நிலையும் தோன்றிது. இவற்றிலிருந்து இலங்கை முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக பலதரப்பட்ட சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய முயற்சிகள் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் தனி நபர்களாலும், ஸ்தாபன ரீதியான அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. எனவே, அவர்களிடையே ஆத்மீக ரீதியான மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் முயற்சியில் ஓரிரு உள்ளூர், வெளியூர் முஸ்லிம்கள் தனிநபர்களாகவும், சூபித்துவ தரீக்காக்கள் **(Mysticism)** ஸ்தாபன அமைப்பிலும் ஈடுபட்டன. 'தரீக்கா' எனும் பதத்தின் பொருள் பாதை என்பதாகும். எனினும், நாளடைவில் உளப்பக்குவத்தை ஏற்படுத்தி ஆன்மீக எழுச்சி ஒன்றிற்கு வழிகோலும் பயிற்சி ஒன்றைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்பட்டது. முஸ்லிம் உம்மத்தின் ஆன்மீகத்துறை மேம்பாட்டில் ஆர்வம் காட்டிய சூபித்துவத் தரீக்காக்கள், இலங்கைவாழ் முஸ்லிம்களிடையேயும் சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டன. இலங்கையில் காதிரிய்யா, ஷாதுலிய்யா, நக்ஷபந்திய்யா, றிபாஇய்யா, ஷிஸ்திய்யா போன்ற தரீக்காக்கள் உள்ளன. இவற்றுள் ஷாதுலிய்யாத் தரீக்காவின் மூலம் இலங்கை முஸ்லிம்களிடையே குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களிடையே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள, மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆத்மீக ரீதியான விழிப்புணர்வு முயற்சிகள் பற்றியே இக்கட்டுரையில் ஆராயப்படவிருக்கிறது.*

*திறவுச் சொற்கள் : ஸூபி, ஷாதுலிய்யா, காதிரிய்யா, தரீக்கா*

## 1. ஆய்வின் நோக்கம்

முஸ்லிம்களை சன்மார்க்க ரீதியாக நெறிப்படுத்துவதையும், அவர்களுக்கு சன்மார்க்க வழிகாட்டல்களை வழங்கி, மனிதனின் ஆன்மீகத் துறையை சீர்செய்யும் முயற்சியில் தரீக்காக்கள் ஆற்றிவந்த பணிகள் இன்று மறக்கடிக்கப்பட்ட நிலையில் அவற்றை சந்தேகக் கண்ணோக்கில் நோக்கும் நிலை ஏற்பட்டுள்ள இக்காலப் பகுதியில் அச்சந்தேகங்களைக் களைந்து ஒரு தெளிவை ஏற்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 2. ஆய்வுமுறை

இவ்வாய்வு ஒரு பண்பு சார் ஆய்வாகும். இவ்வாய்வின் முதன் நிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்காக அவதானம், நேர்காணல், வினாக் கொத்து முறை ஆகியன கையாளப்பட்டுள்ளன. அவதானத்தில் பங்குபற்றல் அவதானம் மூலம் தரவுகள் திரட்டப்பட்டதுடன் நேர்காணலில் கட்டமைக்கப்பட்ட நேர்காணலும் (Structured Interview) வினாக்கொத்து முறையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்களும் கையாளப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக தஸவ்வுப், ஷாதுலிய்யா தரீக்கா என்பன குறித்து பொதுவாக எழுதப்பட்டுள்ள நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றோடு, இலங்கையில் அவ்வப்போது வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், விஷேட மலர்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 3. இலக்கிய மீளாய்வு

தஸவ்வுப் கோட்பாடு பற்றியும், ஸூபி தரீக்காக்களின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றியும் பல்வேறு நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்களின் ‘ஆத்ம ஞானிகளும் அறப் போராட்டங்களும்’ என்ற சிறு நூல், ‘ஸூபி தரீக்காக்களின் தோற்றமும் வளர்ச்சியும்’ எனும் தலைப்பில் இஸ்லாமிய சிந்தனையில் அவரால் எழுதப்பட்ட கட்டுரை, ஸீ. ஐயூப் அலி அவர்களால் ‘தஸவ்வுப் - கோட்பாடும் வரலாறும்’ எனும் தலைப்பில் இஸ்லாமிய சிந்தனையில் எழுதப்பட்ட தொடர் கட்டுரைகள் என்பன இத்துறையில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க ஆக்கங்களாகும். எனினும், மட்டக்களப்பு மாவட்டம் குறித்து இத்துறையில் எதுவித ஆய்வும் மேற்கொள்ளப்படாமை ஒரு பெரும் குறைபாடேயாகும்.

## 4. தஸவ்வுப் கோட்பாடு (ஸூபித்துவம்)

இஸ்லாமிய ஆத்மீகஞானக் கோட்பாட்டையும் அதனுடன் தொடர்பான அம்சங்களையுமே ‘தஸவ்வுப்’ என்ற பதம் குறிக்கின்றது. இக் கோடபாடுகளுக்கமைய தமது வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள் ‘ஸூபிகள்’ என அழைக்கப்படுகின்றனர். தஸவ்வுப், ஸூபி என்ற இப்பதங்கள் நபி (ஸல்)[1] அவர்களது காலத்திலும்

[1] ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்ற சொற்றொடரின் சுருக்கமான வடிவம். அல்லாஹ் அவர் மீது கிருபை செய்வானாக என்பது அதன் அர்த்தமாகும்.

ஸஹாபாக்களது[2] காலத்திலும் இருக்கவில்லை. ஹிஜ்ரி[3] 2ஆம் நூற்றாண்டில்தான் இவை அறிஞர்கள் மத்தியில் அறிமுகமாகிப் பிரபல்யமடைந்தன.

இப்பதங்கள் எந்த மூலத்திலிருந்து தோன்றின என்பதை வரையறுத்துக் கொள்வதில் இஸ்லாமிய அறிஞர்கள் கருத்து முரண்படுவர்.

- ‘அஸ்ஹாபுஸ் ஸுப்பா’ என்ற இரட்டைப் பதத்தினை அடியொட்டிப் பிறந்திருக்கலாம் என சில அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இது திண்ணைத் தோழர்கள் என்ற பொருளைக் கொடுக்கின்றது. ஆரம்ப முஸ்லிம்களில் ஒரு சிறு கூட்டத்தினர் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பு மிகுதியால் எப்போதும் நபியவர்களுடனேயே ஒன்றித்து, அவர்களது வாழ்வின் ஒவ்வோர் அம்சத்தையும் நுணுக்கமாக அவதானித்து, செயற்படத்தி வந்தனர். இந்த ரீதியில் ஸுபிகள் என்போரும் நபியவர்களின் நடைமுறைகளை அப்படியே பின்பற்றி வாழ முற்பட்டதால் ‘ஸுபி’ என்ற பதம் ‘ஸுப்பா’ என்ற சொல்லிலிருந்து தோன்றியதாக இவர்கள் ஆதாரம் காட்டுகின்றனர் (கைருல் பஷர், எச்.ஐ.எம்., 1998, ஷரீஆவின் பர்வையில் தஸவ்வுப், ப. 05).
- ஸுபிகள் எப்போதும் கனத்த கம்பளி உடை தரித்திருந்தனர். எனவே, இச் சொல் கம்பளி என்ற கருத்தைத் தரும் ‘ஸுப்’ என்ற பதத்திலிருந்து உருவாகியிருக்கலாம். (கைருல் பஷர், எச்.ஐ.எம்., 1998, ஷரீஆவின் பர்வையில் தஸவ்வுப், ப. 05).
- வரிசை என்ற பொருளைக் கொண்ட ‘ஸப்புன்’ என்ற சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம். அதாவது உலகப் பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இறைவணக்கத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர். இத்தகையோர் அல்லாஹ்வின் திருப்தியை நாடியும் அவனது அருட்கொடைகள்மீது பேராவல் கொண்டும் அவனைத் துதி செய்து வழிபடுவதில் எப்பொழுதும் முதல் வரிசையில் இடம்பிடித்துக் கொண்டனர். இதனால், ‘முதல் வரிசைக் காரர்கள்’என்ற பொருளைக் கொடுக்கும் வகையில் இத்தகையோர் அஸ்ஸப்பு என அழைக்கப்பட்டிருக்கலாம்; அதுவே பின்னர் ஸுபி என்பதாக மருவியிருக்கலாம்.

---

[2] நபியவர்களது காலத்தில் வாழ்ந்த அவர்களது தோழர்கள் இவ்வாறு அழைக்கப்படுவர்.

[3] இஸ்லாமிய ஆண்டுக் கணிப்பு முறை இவ்வாறு அழைக்கப்படுகிறது.

- தூய்மை என்ற அர்த்தத்தைக் கொடுக்கும் 'ஸபா' என்ற பதத்திலிருந்து தோன்றியிருக்கலாம். அதாவது ஆன்மீக ஞானிகளைப் பொறுத்தவரை உலக ஆசைகள், மோசமான எண்ணங்கள், பாவமான நடத்தைகள் முதலானவற்றை விட்டும் விலகி தூய்மையான உள்ளத்தோடு செயற்பட்டதால் அவர்கள் பரிசுத்தவான்களாக மதிக்கப்படார்கள். எனவே, இத்தகையோர் தூயவர்கள் என்ற கருத்தில் 'ஸபா' என்ற பதத்தால் அழைக்கப்பட்டிருக்கலாம். பின்னர் இப்பதம் 'ஸூபி' என்பதாக மாறியிருக்கலாம்.
- ஞானம் என்ற பொருள்படும் 'ஸோபியா' என்ற கிரேக்க மொழிச் சொல்லிலிருந்து அவை தோன்றியிருக்கலாம். கிரேக்கர், பொருட்களின் யதார்த்தத்தை அறிவதில் நாட்டம் கொண்டிருந்தனர். இஸ்லாத்தின் வருகையின் பின்னர் முஸ்லிம்களுக்குள்ளேயும் இத்தகைய சிந்தனைப் போக்கில் செயற்பட்ட சிலர் ஆன்மீகஞானிகளாக இனம் காணப்பட்டனர். கிரேக்க அறிஞர் குழுவினருக்குச் சமமானவர்களாக இவர்களும் காணப்பட்டதனால் அவர்களைக் குறிக்கும் ஸோபியா என்ற பதத்தின் மூலம் இவர்களும் அழைக்கப்பட்டிருக்கலாம். பின்னர், அப்பதம் மாற்றங்களைப பெற்று 'ஸூபி' என்பதாக மாறியிருக்கலாம். (கைருல் பஷர், எச்.ஐ.எம்., 1998, ஷரீஆவின் பர்வையில் தஸவ்வுப், ப. 05).

## 5. குர்ஆன்[4], ஸுன்னாவின்[5] நோக்கில் தஸவ்வுப்

தஸவ்வுப், ஸூபி என்ற சொற் பிரயோகங்கள் ஹிஜ்ரி 2ஆம் நூற்றாண்டு காலப்பகுதி வரையில் முஸ்லிம்களது வழக்கத்தில் இருக்கவில்லை. எனினும், அப்பதங்கள் உணர்த்துகின்ற கருத்துக்களும், கோட்பாடுகளும், அனுஷ்டான முறைகளும் நபி (ஸல்) அவர்களது காலம் முதலே புழக்கத்தில் இருந்து வந்துள்ளன.

'தஸவ்வுப்' என்ற பதம் உணர்த்துகின்ற கருத்து குர்ஆனின் பரிபாஷையில் 'தஸ்கியா' என்ற பதத்தால் குறிக்கப்படுகின்றது. தஸ்கியா என்றால் உளப் பரிசுத்தம் என்பது அர்த்தமாகும். முஹம்மத் (ஸல்) அவர்கள் உலகிற்கு நபியா அனுப்பப்பட்டதன் நோக்கத்தை அல்குர்ஆன் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

"எழுத்தறிவில்லாத மக்களுக்காக அவர்களிலிருந்தே ஒரு தூதுவரை அவன் அனுப்பி வைத்தான். அவர்கள் இதற்கு முன் பகிரங்கமான வழிகேட்டிலிருந்த போதிலும், அவர் அவனுடைய வசனங்களை

[4] இஸ்லாத்தின் முதலாவது சட்ட மூலாதாரம். இறைவனால் அருளப்பட்ட இறுதி வேத நூல்.

[5] முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிமுறை.

அவர்களுக்கு ஓதிக் காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கி வைத்து அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார்''[6].

இத்திருமறை வசனத்தில் நபி (ஸல்) அவர்களது பணிகளில் மனித உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்ற 'தஸ்கியா' எனப்படும் பணியும் முக்கியமானதொன்றாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச்சைகளால் சூழப்பட்ட உலகில் இறைவனுக்கப் பொருத்தமற்ற ஆசைகள், சிந்தனைகள், செயற் தூண்டுதல்களிலிருந்து உள்ளத்தகை கட்டுப்படுத்தி, சிறந்த பண்புகளை அதில் வளர்த்துக் கொள்வதையும் செயற்பாடுகளில் தூய்மையான எண்ணத்தை நிலைபெறச் செய்தலையுமே 'தஸ்கியா'(உளப் பரிசுத்தம்) என்ற சொல் குறிக்கின்றது[7]

'தஸ்கியதுன்னப்ஸ்' எனும் உளப் பரிசுத்தம் ஆத்மாவைப் பரிசுத்தப்படுத்தும் முக்கிய ஓர் ஊடகமாக ஆரம்பகாலம் தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

''ஆத்மாவின் மீதும் அதனை உருவாக்கியவன் மீதும் அதன் நன்மை தீமைகளை அதற்கறிவித்தவன் மீதும் சத்தியமாக, எவன் (பாவங்களை விட்டும்) தன்னைப் பரிசுத்தமாக்கிக் கொண்டானோ, அவன் நிச்சயமாக சித்தியடைந்து விட்டான். எவன் அதனைப் பாவத்தில் புதைத்து விட்டானோ அவன் நிச்சயமாக நஷ்டமடைந்து விட்டான்''[8].

இதே கருத்து ஒரு ஹதீஸில்[9] பின்வருமாறு பதிவாகியிருக்கிறது.

''நிச்சயமாக மனித உடலில் ஒரு சதைப் பிண்டம் உண்டு. அது சீர் பெற்றுவிட்டால் முழு உடலும் சீர்பெற்று விடும். அது சீர்கெட்டு விட்டால் முழு உடலும் சீர்கெட்டு விடும். அதுதான் உள்ளம்''.

தஸவ்வுப் என்ற பதத்துக்கு இணையாக ஹதீஸில் 'இஹ்ஸான்' என்ற பதம் கையாளப்பட்டிருக்கிறது. 'இஹ்ஸான்' என்பது செய்யும் காரியத்தை நபியவர்களின் நடைமுறையைப் பின்பற்றி பூர்த்தியாகவும், அழகாகவும் செய்வதைக் குறிக்கிறது. நாம் அல்லாஹ்வைப் பார்க்கா விட்டாலும் அவன் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற அச்ச உணர்வோடு அவன் மீது பூரண நம்பிக்கை கொண்டு அவனது பேரருளை எதிதுபார்த்து நற்கருமங்களில் ஈடுபடுவதும் 'இஹ்ஸான்' என்பதாக அமையும்.

ஒரு முறை ஜிப்ரீல்[10] (அலை)[11] அவர்கள் நபி (ஸல்) அவர்களின் முன் பிரசன்னமாகி இஹ்ஸான் என்றால் என்ன என்று கேட்டபோது நபியவர்கள் '' நீர் அல்லாஹ்வைக் கண்முன்னாலே காண்பது போன்று நினைத்து வணங்குவதாகும். ஏனெனில், நீர் அவனைப் பார்க்காவிட்டாலும்

---

6 அல்குர்ஆன் (62:02)

7 மேற்படி நூல், ப. 08

8 அல்குர்ஆன் ( 91: 07 – 10)

9 முஹம்மத் (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பன இவ்வாறு அழைக்கப்படும்.

10 அல்லாஹ்விடமிருந்து அவனது தூதர்களுக்கு தூது கொண்டு வரும் வானவர்.

11 அலைஹிஸ்ஸலாம் என்பதன் சுருக்க வடிவம். அவர் மீத சாந்தி உண்டாகட்டும் என்பது அதன் அர்த்தமாகும்.

அவன் உம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்'' என விடை பகர்ந்தார்கள் (கைருல் பஷர், எச்.ஐ.எம்., 1998, ஷரீஆவின் பர்வையில் தஸவ்வுப், ப. 09).
குர்ஆன், ஹதீஸின் அடிப்படையிலான இந்த உள்ளார்ந்த ஆன்மீக அம்சங்களோடு தொடர்புடைய விடயங்கள் தொகுக்கப்பட்டு, அவற்றோடு தொடர்பான சில கோட்பாடுகள் சேர்க்கப்பட்டு தனித்த ஒரு கலையாக வளர்க்கப்பட்டதே தஸவ்வுப் ஆகும்.

தஸவ்வுபும் இஸ்லாத்தின் ஏனைய கலைகளான தப்ஸீர்[12], பிக்ஹ்[13], தாரீக்[14] போன்று ஆரம்பத்தில் தனித்தனியாகப் பிரித்து நோக்கப்படவில்லை. இஸ்லாம் என்ற பொதுப் பெயரிலேயே இவை உள்ளடங்கியிருந்தன. இஸ்லாமிய சாம்ராச்சியம் விரிவடைந்து பல்வேறு நாகரிகங்கள், தத்துவங்களோடு முஸ்லிம்களுக்குத் தொடர்பு ஏற்பட்டபோது முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாத்தோடு தொடர்பான கலைகளைப் பாகுபாடு செய்து தனித்தனிக் கலைகளாக விளக்கினர். இந்த அடிப்படையில் ஹிஜ்ரி 2ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்த ஒரு தனித்துவமிக்க கலையே தஸவ்வுப் ஆகும்.

## 6. தஸவ்வுபின் வளர்ச்சிப் போக்கில் தரீக்காக்கள்

### தரீக்காக்கள்

உண்மையான ஸூபித்துவத்தின் ஓர் அங்கமாகத் தோன்றியதே தரீக்காக்களாகும். தரீக்கா என்றால் குறிப்பிட்ட சில மெய்ஞ்ஞானக் கருத்துக்களையும் அவற்றை அடைய உதவும் சில குறிப்பட்ட வழிமுறைகளையும் கொண்ட ஒரு பாதை என்பது கருத்தாகும். தரீக்காக்களின் தோற்றம் தஸவ்வுப் வரலாற்றில் புதியதொரு அத்திபாரமாக அமைந்தது. மக்களை ஆத்மீக வழியில் நெறிப்படுத்தவதில் இவை மகத்தான பங்கை வகித்தன. பிக்ஹ் எனும் சட்டக் கலைத் துறையில் மத்ஹப்கள்[15] தோன்றியது போன்று, தஸவ்வுபின் வளர்ச்சியில் தரீக்கா எனும் ஆத்மஞான மரபுகள் தோன்றி. (சுக்ரி, எம்.ஏ.எம்., 1999 ''ஸூபி தரீக்காக்களின் தோற்றமும் வளர்ச்சியும்'', இஸ்லாமிய சிந்தனை (21: 02), ப. 13).

பிக்ஹ் இஸ்லாமிய சட்டம் பற்றிய அறிவினது அடிப்படையில் தோன்றி வளர்ந்த கலையாக விளங்க, தஸவ்வுப் ஆத்மீக அனுபவத்தின் அடியாகத் தோன்றிய கலையாக உள்ளது. ஆனால் இவ்வரண்டினதும் மூலாதாரங்களாக குர்ஆனும், ஸுன்னாவுமே அமைகின்றன.

ஹிஜ்ரி 5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் பெருந்தொகையான தரீக்காக்கள் தோன்றி குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றன.

[12] அல்குர்ஆனுக்கான விரிவுரை
[13] இஸ்லாமிய சட்டக் கலை
[14] வரலாறு
[15] இஸ்லாமிய சட்ட மரபுகள்

ஒவ்வொரு தரீக்காவும் ஒரு புகழ்பூத்த ஆத்மஞானியைத் தலைவராகக் கொண்டிருந்தது. அவர் ‘ஷெய்க்’ என அழைக்கப்பட்டார். இந்த ஷெய்குகள் ஷரீஅத்[16] வழிமுறைகளைப் பின்பற்றி பைஅத்தின்[17] அடிப்படையில் மக்களை நன்னெறிப்படுத்தும் வழக்கத்தைக் கடைப்பிடித்தனர். தம்மிடம் பைஅத் பெற்றவர்களை ஆத்மீகப் பாதையில் நெறிப்படுத்தி குர்ஆனினதும் ஹதீஸினதும் வெளிச்சத்தில் அவர்களை ஆத்மீக உயர்ச்சிக்கு இட்டுச் செல்வதே அவர்களது பணியாகக் காணப்பட்டது. இதற்காக ஒவ்வொரு ஷெய்கும் ஷரீஅத் வரையறைகளுக்கு இணக்கமான விதத்தில் சில குறிப்பிட்ட மெய்ஞ்ஞானக் கருத்துக்களையும் தமது அனுபவ வாயிலாக அவற்றை அடைய முயலும் சில தனித்துவமான பயிற்சி வழிமுறைகளையும் கடைப்பிடித்தனர். இதேபோல் நாளாந்த பொதுவாழ்விலும் ஷெய்க் தனது சீடருக்கு (முரீத்) வழி காட்டுவார்.

தரீக்காவில் இணையும் ஒருவர் இறைதிருப்தியைப் பெறுவதையே தனது அடிப்படை இலட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும். இத்தகையவர் சுய விசாரணை செய்தல், பாவமன்னிப்புத் தேடல், பொறுமையைக் கடைப்பிடித்தல், ஷெய்குக்கு மனப்பூர்வமாகக் கட்டுப்படுதல் போன்ற கருமங்களைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும் என்றும் நாளாந்த வாழ்வில் அதிகமான நேரம் அல்லாஹ்வை திகிர்[18] செய்வதிலும் அவனைப் பற்றி சிந்திப்பதிலும் ஈடுபட்டிருக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்பட்டார்.

இஸ்லாமிய வரலாற்றில் சுமார் 120 தரீக்காக்கள் தோன்றி வளர்ந்திருப்பதாக அறிய முடிகிறது. இவற்றில் பெரும்பாலானவை குறிப்பிட்ட காலப்பிரிவோடு செயலிழந்துபோக, வேறு சில தரீக்காக்கள் உலகளாவிய ரீதியில் பரவி செல்வாக்குப் பெற்றன. காதிரிய்யா, ஷாதுலிய்யா, றிபாஇய்யா, ஜிஸ்திய்யா, நக்ஷபந்திய்யா போன்ற சில தரீக்காக்கள் இன்றுவரை அவற்றின் செல்வாக்கை மக்கள் உள்ளங்களில் ஆழமாகப் பதித்திருக்கின்றன.

முதன் முதலாக ஒரு தரீக்காவுக்குரிய அடிப்படை அம்சங்களை இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) தான் ஒழுங்குபடுத்தினார். எனினும், அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)வினால் தோற்றுவிக்கப்பட்ட மெய்ஞ்ஞான வழியான காதிரிய்யா தரீக்காதான் இஸ்லாமிய வரலாற்றில் ஷரீஆவுக்கு இயைந்த வகையில், நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மிக விரிந்த ஆத்மஞான அனுஷ்டானங்களை உள்ளடக்கிய முதலாவது தரீக்காவாகக் கருதப்படுகிறது.

காதிரிய்யா தரீக்காவைத் தொடர்ந்து இஸ்லாமிய உலகில் ஷாதுலிய்யா, ஸுஹ்றவர்திய்யா, றிபாஇய்யா, ஜிஸ்திய்யா போன்ற பல தரீக்காக்கள் தோன்றின. இவை

[16] இஸ்லாமிய சட்டம்

[17] உடன்படிக்கை

[18] தியானித்தல்

காலப்போக்கில் பல கிளைத் தரீக்காக்களாக வளர்ச்சி கண்டன.

ஷரீஅத்தின் ஒளியில் மக்களுக்கு வழிகாட்டுவதே தரீக்காக்களின் குறிக்கோளாகும். தரீக்காக்கள், இஸ்லாமிய வரலாற்றில் அவை தோன்றி வளர்ச்சி பெற்ற காலப்பிரிவில் த.்.வாவின் முக்கிய பணியை மேற்கொண்ட ஒரு சாதனமாகவும் திகழ்ந்துள்ளதை மறுக்கமுடியாது. ஷரீஅத்தின் போதனைகளும், வழிகாட்டல்களும் தரீக்காக்கள் மூலம் உயிரூட்டப்படுகின்றன.

## 7. இலங்கையில் தரீக்காக்களின் அறிமுகம்

ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு முஸ்லிம் உம்மத்தின் ஆன்மீகத்துறை மேம்பாட்டில் ஆர்வம் காட்டிய சூபித்துவத் தரீக்காக்கள், இலங்கைவாழ் முஸ்லிம்களிடையேயும் சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டன. இத்தரீக்காக்கள் அவை தோற்றம் பெற்ற முஸ்லிம் நாடுகளிலிருந்து நேரடியாக அன்றி, இந்தியாவினூடாக இலங்கையில் அறிமுகமாகியமை அவதானிக்கத் தக்கதாகும்.

இலங்கையில் இஸ்லாத்தின் பரவலில் தரீக்காக்கள் முக்கிய பங்கை வகித்தன. எனினும், கி.பி.1505இல் போர்த்துக்கேயரின் வருகையைத் தொடர்ந்து இஸ்லாமிய உலகுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதால் தரீக்காக்களின் பணிகளும் இடைநிறுத்தப்பட்டன. போர்த்துக்கேயர் புறப்பட்டுச் சென்றதும் அனேகமாக எல்லாத் தரீக்காக்களுமே தென்னிந்திய முஸ்லிம்களால் இலங்கையில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன (பாரி, எம்.எஸ். அப்துல் (2001). இலங்கை முஸ்லிம்களின் சமூக, கலாசார மறுமலர்ச்சியில் அறபு மத்ரஸாகக்ளின் பங்களிப்பு. ப.30 ).

இலங்கையில் காதிரிய்யா, ஷாதுலிய்யா, நக்ஷபந்திய்யா, றிபாஇய்யா, ஷிஸ்திய்யா போன்ற தரீக்காக்கள் உள்ளன. இவை தமக்கெனத் தனியான வழிமுறைகளை அமைத்துக் கொண்டு, தமது இஹ்வான்களிடையே[19] ஆன்மீக முன்னேற்றத்துக்கான பயிற்சிகளைப் பரவலாக்கி வருவதுடன் தங்கள் தங்கள் திக்ருகளை ஸாவியாக்களிலும்[20] தைக்கியாக்களிலும்[21] நடாத்தி வருகின்றன.

தரீக்காக்களின் நோக்கம் மனிதனின் ஆன்மீகத் துறையை சீர் செய்வதாக அமைந்திருந்தது. இதனூடாக சிற்றின்பங்களில் மூழ்கி, இரட்சகனை மறந்து வாழ்ந்த முஸ்லிம்களிடையே இறையச்சத்தை ஏற்படுத்தவும் அவர்களை வணக்கவழிபாடுகளில் ஈடுபடுத்தவும் முடிந்தது தரீக்காக்களின் அறிமுகத்தினால் பள்ளிவாயல் தொடர்புகள் மக்களுக்கு அதிகம் ஏற்பட்டன. தைக்கியாக்கள், ஸாவியாக்கள் ஆங்காங்கு உருவாயின. தரீக்காக்களின் பெயரால் பல அறபுக் கல்லூரிகளும் ஆரம்பிக்கப்பட்டன. பிற

[19] சகோதரர்களிடையே

[20] ஜங்காலத்தொழுகைகளுடன் தரீக்கா சார்ந்த வணக்க வழிபாடுகளும் நடைபெறும் இடங்கள்.

[21] ஜங்காலத் தொழுகைகள் நடைபெறும் சிறு பள்ளிவாயல்கள். இவற்றில் சிலவற்றில் தரீக்கா சார்ந்த வணக்க வழிபாடுகளும் இடம்பெறுவதுண்டு.

பண்பாட்டுத் தாக்கங்களிலிருந்து முஸ்லிம்களைப் பாதுகாக்க முடிந்தது.

### 8. **இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்கா**

முஸ்லிம் உலகில் தோன்றிய முக்கிய தரீக்காக்களில் ஷாதுலிய்யாத் தரீக்காவும் ஒன்றாகும். இத்தரீக்காவின் ஸ்தாபகரான அபுல் ஹஸன் அலி அஷ்ஷாதுலி (ரஹ்) (ஹிஜ்ரி 593 - 656 / கி.பி. 1195 - 1258) வட ஆபிரிக்காவிலுள்ள சியூட்டாவுக்குத் தெற்கேயுள்ள 'கிமாறா' எனும் ஊரில் பிறந்தார். அன்னாருக்கு ' அலி' என்று பெயர் சூட்டப்பட்டது (காயல்பட்டணம் ஜாவியா நூற்றாண்டு விழா மலர். 1974. ப.35)

ஆரம்பத்தில் அபூ மத்யன் என்னும் புகழ்பூத்த சூபியின் மாணவரான அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் ஹராஸியின் சீடராக விளங்கிய அவர் அதனைத் தொடர்ந்து அபுல் பத்ஹ் அல் வாஸிதி (ம. ஹிஜ்ரி 618) யின் சீடராக சில காலம் விளங்கினார். அவரின் பணிப்புரையில் மேற்கு நோக்கிப் புறப்பட்ட அவர் 'பெஸ்' எனுமிடத்தில் அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஷ் என்னும் ஆத்ம ஞானியைச் சந்தித்து அவரது சீடராகவும் விளங்கினார். அதன் பின் அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஷின் கட்டளையின் பேரில் டியூனிஸியாவிற்குச் சென்ற அவர் 'ஷாதிலா' எனுமிடத்தில் சில காலம் ஏகாந்த வாழ்க்கையிலும் தியானத்திலும் ஈடுபட்டார். இதனாலேயே அவர் 'ஷாதிலி' என்ற அடைமொழியைப் பெற்றார் (சுக்ரி,எம்.ஏ.எம். 1999 ''ஸூபி தரீக்காக்களின் தோற்றமும் வளர்ச்சியும்'', இஸ்லாமிய சிந்தனை 21: 02 ப.18). தனது அமைதியான தியான வாழ்வு மூலம் ஆத்மீகப் பக்குவம் பெற்ற அவர் அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

இவர் இரவு பகலாக இறை வணக்கத்தில் ஈடுபட்டதுடன் மக்களை 'ஷரீஆ' என்ற சன்மார்க்க சட்டப்படி நடக்க வற்புறுத்தியும் வந்தார். இறை வணக்கத்தில் ஆர்வம் பிறப்பதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுத்து, அதன்பால் மக்களை ஆர்வமூட்டியும் வந்தார். இவரது ஆத்மஞான வழிமுறையே 'ஷாதுலிய்யாத் தரீக்கா' என அழைக்கப்படுகிறது. இவர் ஷாதுலிய்யாத் தரீக்காவின் பின்வரும் ஐந்து அடிப்படை நியதிகளையும் அனுஷ்டித்து வரவேண்டுமென்று தனது தரீக்காவைப் பின்பற்றும் மக்களுக்குக் கட்டளையிட்டார்.

1. பகிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்க வேண்டும்.
2. சொல், செயல் இரண்டிலும் சன்மார்க்க நெறிமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
3. சகல கருமங்களிலும் செல்வம், வறுமையுற்ற நிலைகளிலும் சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ்வையே முன்னிலையாக்க வேண்டும்.
4. அல்லாஹ்வின் அருட்கொடைகள் கூடுதலாகவோ, குறைவாகவோ அருளப்படும்போது அவனது செயலுக்குப் பூரணமாக இணங்கி நடத்தல் வேண்டும்.

5. இன்பத்திலும் துன்பத்திலும் அல்லாஹ்விடமே திரும்பிவிட வேண்டும்

உலகிலேயே எல்லாக் கோணங்களிலும் முஸ்லிம்களில் அதிகமானோர் பின்பற்றி அனுஷ்டிக்கும் தரீக்காக்களில் ஷாதுலிய்யா தரீக்கா உன்னத இடத்தை வகிக்கின்றது. மக்கா, மதீனா, அல்ஜீரியா, டியூனிஸ், எகிப்து, சூடான், மலேசியா, இந்தியா, இலங்கை முதலிய இடங்களில் வாழ்வோருக்கு மிகவும் அறிமுகமான தரீக்காவாக இது காணப்படுகிறது (ஷாதுலிய்யா தரீக்கா வரலாற்றில் சுருக்க அய்வு. (தி.இ). ப. 22).

நாஸிரிய்யா, யூசுபிய்யா, ஸரூக்கிய்யா, வபாஇய்யா, ஹாஸிமிய்யா, ஹபீபிய்யா, அரூஸிய்யா, மக்கிய்யா, பாஸிய்யா போன்ற கிளைகளையுடைய இத்தரீக்காவில் ‘பாஸிய்யா’ என்ற கிளையே இலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளது (ஷாதுலிய்யா தரீக்கா வரலாற்றில் சுருக்க அய்வு. (தி.இ). ப. 22).

தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இத்தரீக்கா அஷ் ஷெய்க் முஹம்மத் அல் பாஸி வழியாக பரவியது (அமீன், எம். ஐ.எம்.,(2000), இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும். ப. 163). இதன்பின் தென்னிந்திய காயல்பட்டண வாசியும் ஷெய்க் அல் பாஸியின் கலீபாவுமாகிய[22] முஹம்மத் அபூபக்கர் மிஸ்கீன் ஸாஹிப், அஷ்ஷெய்க் அஹ்மத் இப்னு ஸாலிஹ் அல் யமனி, ஷெய்க் அல் பாஸியின் புதல்வரான அஷ் ஷெய்க் ஷம்ஸுத்தீன் அல் மக்கி அல் பாஸி ஆகியோர் இலங்கை வந்து கொழும்பு அவ்வல் ஸாவியாவில் இருந்து இத்தரீக்காவைப் பரப்பினார்கள் (ஷாதுலிய்யா தரீக்கா வரலாற்றில் சுருக்க அய்வு. (தி.இ). ப. 28)

இவர்களைத் தொடர்ந்து ‘பெரிய மௌலானா’ என அழைக்கப்பட்ட மௌலானா முஹம்மத் ஸாலிஹ் அப்துல் காதிரி (காழி- ஜித்தாவி) இத்தரீக்காவை விரிவான முறையில் பிரபல்யப்படுத்தி பரவச்செய்துள்ளார் (காயல்பட்டணம் ஜாவியா நூற்றாண்டு விழா மலர். 1974. ப.133).

இலங்கையில் கொழும்பு, பாணந்துறை, களுத்துறை, பேருவளை, தர்கா நகர், காலி, வெலிகாமம், மாத்தறை. திக்குவல்லை, பதுளை, கஹட்டோவிட்ட, மல்வானை, வறக்காபொலை, கம்பளை, கண்டி, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் இத்தரீக்காவைப் பெரும்பாலான முஸ்லிம்கள் பின்பற்றி வருகின்றனர் (ஹுஸைன், அசனார் ஜ.ஃபர். (2010). இலங்கை முஸ்லிம்களிடையேயான சமய, சமூக சீர்திருத்தப் பணிகள்: சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலம் பற்றிய விசேட ஆய்வு. பதிப்பிக்கப்படாத முது தத்துவமானி ஆய்வுக் கட்டுரை. ப. 213)

இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்காவின் தலைமையகமாகவும், ஏனைய ஸாவியாக்களுக்கெல்லாம் தாயகமாகவும் கொழும்பு 12 இல் உள்ள ‘உம்மு

[22] பிரதிநிதியுமாகிய

ஸவாயா'[23] திகழ்கிறது. கொழும்பு கிரேன்பாஸிலுள்ள 'அவ்வல் ஸாவியா' இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்கா முரீதீன்களுக்கென்று கட்டப்பட்ட முதல் ஸாவியாவாகும் (ஹுஸைன், அசனார் ஜ.்.பர். (2010). இலங்கை முஸ்லிம்களிடையேயான சமய, சமூக சீர்திருத்தப் பணிகள்: சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலம் பற்றிய விசேட ஆய்வு. பதிப்பிக்கப்படாத முது தத்துவமானி ஆய்வுக் கட்டுரை. ப. 213).

இலங்கை வரும் ஷாதுலிய்யாத் தரீக்கா ஷெய்குமார்கள் இந்த ஸாவியாவுக்குச் சென்று சில நாட்கள் தங்கியிருந்து மக்களுக்கு நற்போதனைகள் புரிவது வழக்கமாகும். அரேபியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பெரியார் யூசுப் மௌலானா அவர்கள் இந்த ஸாவியாவில் தங்கியிருந்து மக்களுக்கு நல்லுபதேசம் புரிவதிலும் நல்வழி காட்டுவதிலும் வாழ்நாளைக் கழித்து, இறுதியில் வபாத்தான நிலையில் இந்த ஸாவியாவிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஷாதுலிய்யா தரீக்கா இலங்கையில் எப்போது தாபன ரீதியாக இயங்க ஆரம்பித்தது என்பதில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. "இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870 - 1915)" என்ற ஆய்வு நூலை எழுதிய பேராதனைப் பல்கலைக்கழக அறபு, இஸ்லாமிய நாகரிகத்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ.எம். அமீன் ஷாதுலிய்யாத் தரீக்கா இலங்கையில் கி.பி. 1840 – 60 க்கு இடைப்பட்ட காலத்தில் தாபன ரீதியாகச் செயற்பட ஆரம்பித்தது என்று தனது ஆய்வில் குறிப்பிடுகிறார். காயல்பட்டணம் 'ஜாவியதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா' அமைப்பினரால் வெளியிடப்பட்ட காயல்பட்டணம் ஜாவியா நூற்றாண்டு மலரில் "இலங்கை நாட்டில் ஷாதுலிய்யாத் தரீக்கா பரவத் தொடங்கி நூறு வருடங்கள் இருக்கும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மலர் 1974ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதாகும். அவ்வாறாயின் இலங்கையில் 1874ஆம் ஆண்டில் ஷாதுலிய்யாத் தரீக்கா அறிமுகம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இக்கருத்துக்களை வைத்து நோக்கும் போது 19 ஆம் நூற்றாண்டின் மத்திய அல்லது பிற்கூற்றில் இலங்கையில் ஷாதுலிய்யாத் தரீக்கா அறிமுகம் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருத முடிகிறது.

## 9. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஷாதுலிய்யா தரீக்காவின் அறிமுகமும் பணிகளும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை அகிய பகுதிகளில் ஷாதுலிய்யா தரீக்காவைப் பின்பற்றுவோர் காணப்படுகின்றனர். இப்பிரதேசங்களில் ஒரே காலப் பகுதிலேயே ஷாதுலிய்யா தரீக்கா

[23] ஸாவியாக்களின் தாய் என்பது இதன் அர்த்தம்.

அறிமுகப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், அறிமுகப்படுத்தப்பட்ட சரியான ஆண்டை அறியமுடியவில்லை. இத்தரீக்காவின் பிரசாரத்திற்கென டாக்டர் ஷெய்க் அல் பாஸி பின் முஹம்மத் இப்றாஹீம் 1934ஆம் ஆண்டில் இலங்கை வந்திருந்தபோது ஷாதுலிய்யா தரீக்காவைப் பின்பற்றும் இக்வான்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் இருக்கிறார்கள் என அறிந்து ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களுக்கும் வருகை தந்துள்ளார். அப்போது ஷெய்க் அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக காத்தான்குடி, ஏறாவூர் பிரதேசங்களில் ஷாதுலிய்யா தரீக்காவின் செயற்பாடுகளை காத்தான்குடியைச் சேர்ந்த கொச்சிக்காய் ஆலிம் என அழைக்கப்பட்ட மர்ஹூம் ஸஹாப்தீன் ஆலிம் வழிநடாத்தி வந்துள்ளார். ஷெய்க் அவர்கள் ஏறாவூருக்கு வருகை தந்தபோது அவர்களை மர்ஹூம் மீராலெவ்வை முகாந்திரம் வரவேற்று தனது வீட்டுக்கும் அழைத்துச் சென்றுள்ளார். அப்போது ஏறாவூர் ஆற்றங்கரைப் பள்ளிவாயலில் ஹழராவுக்குப் பின்னர் அஷெய்க் அவர்கள் பொது மக்களுக்கு பைஅத் வழங்கியுள்ளார்கள். ஆனால், இவர்கள் 1934ஆம் ஆண்டு இவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகை தருவதற்கு முன்பிருந்தே இங்கு ஷாதுலிய்யா தரீக்காவின் செயற்பாடுகள் இடம்பெற்று வந்துள்ளன. 2017ஆம் அண்டில் ஏறாவூரில் அபுல் ஹஸன் அலி அஷ்ஷாதுலி அவர்களின் கீர்த்தியைப் பாடும் 90 ஆவது வருட மனாகிப் ஓதப்பட்டுள்ளது. அவ்வாறாயின் இம்மனாகிப் இங்கு 1928 ஆம் ஆண்டிலிருந்து ஓதப்பட்டிருக்க வேண்டும். ஷாதுலிய்யா தரீக்கா அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டிலேயே இங்கு மனாகிப் ஓதப்பட்டிருக்க நியாயமில்லை. எனவே இவ்வாண்டுக்கு முன்னரேயே இத்தரீக்கா இங்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், 1918 ஆம் ஆண்டுக்கு முன்னரே காத்தான்குடியில் ஷாதுலிய்யா தரீக்கா செயற்பாடுகளுக்கென ஸாவியா கட்டப்பட்டதென்பது அங்குள்ள முதியவர்களின் கருத்தாகும். இவ்வகையில் பார்ர்க்கும்போது இலங்கையில் தென்பகுதியில் ஷாதுலிய்யா தரீக்கா அறிமுகப்படுத்தப்பட்ட காலப் பகுதியிலேயே மட்டக்களப்பு மாவட்டத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

இவ்வாய்வுக்குட்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் ஷாதுலிய்யா தரீக்கா சார்ந்த செயற்பாடுகள் நடைபெறுவதெற்கென தனித்தனியான ஸாவியாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏறாவூரில் 1961ஆம் ஆண்டில் காதியார் வீதியில் அஸ்ஸாவியதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா என்ற பெயரில் ஒரு ஸாவியா அமைக்கப்பட்டுள்ள போதிலும், தூர இடங்களிலுள்ளவர்கள் இங்கு வந்து செல்வது சிரமமாயிருந்தபடியால் 1978ஆம் ஆண்டில் பெண்பாடசாலை வீதியில் மற்றுமொரு ஸாவியா கட்டப்பட்டது. ஏறாவூரில் அமையப் பெற்றுள்ள இவ்விரு ஸாவியாக்களிலும் ஷாதுலிய்யா தரீக்காவின் செயற்பாடுகளை முன்னின்று நடாத்தக்கூடிய மார்க்க அறிஞர்களை உருவாக்கும் நோக்குடன் பகுதி நேர அறபு

மத்ரஸாக்களும் நடைபெற்று வந்துள்ளன. இந்த ஸாவியாக்களில் நாளாந்தம். வாராந்தம், வருடாந்தம் என தரீக்கா அமல்கள் நடைபெற்று வந்துள்ளதோடு மார்க்க அறிஞர்களால் பொதுமக்களுக்கு சன்மார்க்க விளக்கமும் அளிக்கப்பட்டு வந்துள்ளது. இம்மூன்று பிரதேசங்களிலுள்ள தரீக்கா இக்வான்களிடையே பரஸ்பரம் ஒற்றுமை நிலவி வந்துள்ளது. ஒரு பிரதேசத்தில் வசிப்பவர்கள் ஏனைய பிரதேசங்களில் நடைபெறும் தரீக்கா சார்ந்த அமல்களில் கலந்து கொள்ளக்கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

இப்பிரதேசங்களைவிட ஷாதுலிய்யா தரீக்கா செயற்பாடுகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வரும் தென்னிலங்கையிலிருந்தும் தரீக்கா பிரசாரக் குழுவினர் இப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்து தமது இக்வான்களிடையே தரீக்கா விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றனர். இப்பிரசாரக் குழுவில் கம்பளை, பேருவளை, தொட்டவத்தை, பாணந்துறை, காலி, வெலிகமை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் அடங்கியிருப்பர். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவிய பயங்கரவாதப் பிரச்சினை காரணமாக இவர்களின் வருகை நீண்ட காலமாகத் தடைப்பட்டிருந்தபோதிலும், தற்போது பயங்கரவாதப் பிரச்சினை நீங்கியுள்ள நிலையில் இவர்கள் மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகை தரத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 10. முடிவுரையும் பரிந்துரைகளும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அறிமுகமாகியுள்ள தரீக்காக்களுள் காலத்தால் முந்தியது ஷாதுலிய்யா தரீக்காவாகும். இத்தரீக்கா அறிமகமாகியதிலிருந்து பொது மக்களிடையே அதிக செல்வாக்கைப் பதித்துள்ளபோதிலும், தற்போது இத்தரீக்காவின் பணிகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. வாழைச்சேனை பகுதியில் இத்தரீக்காவின் பணிகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்த நிலையிலேயே காணப்படுகிறது. அங்கு ‘அஸ் - ஸாவியதுஸ் ஸம்ஸிய்யா லித்தரீகதுஸ் ஷாதுலிய்யா’ என்ற பெயரில் பொருத்தப்பட்டிருந்த பெயர்ப் பலகையும் கழற்றப்பட்டு, ஒரு மூலையில் வைக்கப்பட்டுள்ளது. ஏறாவூர், காத்தான்குடி பகுதிகளில் இப்பணிகள் ஓரளவேனும் நடைபெற்று வருகின்றபோதிலும் அவற்றில் பொது மக்கள் மிக்க குறைந்தளவிலேயே ஈடுபாடு காட்டி வருகின்றனர். இப்பரதேசங்களில் தரீக்கா செயற்பாடுகளை முன்னின்று நடாத்தக்கூடிய மார்க்க அறிஞர்களை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பகுதி நேர அறபு மத்ரஸாக்களும் செயலிழந்துள்ளன. எனினும், இம்மத்ரஸாக்களில் ஆரம்பத்தில் கல்வி கற்றவர்கள் இன்று ஆத்மீகம் சார்ந்த செயற்பாடுகளில் சிறப்பாக ஈடுபட்டு வருவதுடன், அவர்கள் உலகியல் ரீதியாகவும் நல்ல நிலையில் இருக்கின்றமை மகிழ்ச்சியளிக்கக் கூடிய விடயமாகும்.

தரீக்கா அமல்களை செய்வதனூடாக உளப் பரிசுத்தத்தை ஏற்படுத்த முடியுமா ? என்ற சந்தேகம் இப்பகுதி இளைஞர்களிடையே வளர்ந்து வருகிறது. 1950 களின் பிற்கூற்றில் இப்பகுதியில் அறிமுகமாகிய த.்.வா அமைப்புகளினால் இவ்விளைஞர்கள் கவரப்பட்டதைத் தொடர்ந்து தரீக்கா அமல்களிலிருந்து ஒதுங்கி வருவதை அவதானிக்க முடிகிறது. இப்பகுதியில் ஷாதுலிய்யா தரீக்கா அறிமுகம் செய்யப்பட்ட காலப் பகுதியில் இத்தரீக்காவினால் அதிகம் கவரப்பட்டவர்களின் குடும்பத்தினரும், அவர்களின் சில பிள்ளைகளுமே இத்தரீக்கா அமல்களை இன்றுவரை செய்து வருகின்றனர்.

எனவே, மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் ஷாதுலிய்யா தரீக்காவின் பணிகளை பழைய நிலைக்குக் கொண்டவர வேண்டுமானால், இத்தரீக்கா குறித்து பொது மக்களுக்கு விளக்கமளிக்கப்பட வேண்டும். இப்பகுதிகளில் இயங்கி வந்து, தற்போது செயற்பாடற்றிருக்கும் பகுதி நேர அறபு மத்ரஸாக்களை மீண்டும் செயற்படச் செய்ய வேண்டும். இரண்டு, மூன்று வருடங்களுக்கொரு தடவை தென்னிலங்கையிலிருந்து இம்மாவட்டத்துக்கு வருகை தரும் தரீக்கா பிரசாரக் குழுவினர், ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கொரு தடவையேனும் வருகை தந்து பொது மக்களுக்கு தரீக்கா சார்ந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். தென்னிலங்கையில் சிறிது காலம் நடாத்தப்பட்டு வந்து தற்போது கைவிடப்பட்டிருக்கும் ஷாதுலிய்யா தரீக்கா தேசிய மகா நாடுகளை மீண்டும் நடாத்த முயற்சிப்பதுடன் அம்மகாநாடுகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் நடாத்தப்பட சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


1. அமீன், எம்.ஐ.எம். (2000). இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870 – 1915). ஹெம்மாதகம: அல்ஹஸனாத் பதிப்பகம்.
2. அலி, ஸீ. ஐயூப்., ''தஸவ்வுப் - கோட்பாடும் வரலாறும்''. இஸ்லாமிய சிந்தனை (2003 ஜனவரி – மார்ச் 25 :02). பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.
3. சுக்ரி, எம்.ஏ.எம். (1984). ஆத்ம ஞானிகளும் அறப் போராட்டங்களும். பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.
4. சுக்ரி, எம்.ஏ.எம்., ''ஸூபி தரீக்காக்களின் தோற்றமும் வளர்ச்சியும்'', இஸ்லாமிய சிந்தனை (1999 21: 02) . பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.
5. பஷர், எச்.ஐ.எம். கைருல். (1998). ஷரீஆவின் பார்வையில் தஸவ்வுப். தர்கா டவுண் : புஷ்ரா பதிப்பகம்.
6. பாரி, எம்.எஸ். அப்துல் (2001). இலங்கை முஸ்லிம்களின் சமூக, கலாசார மறுமலர்ச்சியில் அறபு மத்ரஸாகளின் பங்களிப்பு. பதிப்பிக்கப்படாத முது தத்துவமானி ஆய்வுக் கட்டுரை. பேராதனைப் பல்கலைக்கழகம்.
7. காயல்பட்டணம் ஜாவியா நூற்றாண்டு விழா மலர். (1974) காயல்பட்டணம் : ஜாவியதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா.

8. ஹுஸைன், அசனார் ஜ.்.பர். (2010). “இலங்கை முஸ்லிம்களிடையேயான சமய, சமூக சீர்திருத்தப் பணிகள்: சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலம் பற்றிய விசேட ஆய்வு”. பதிப்பிக்கப்படாத முது தத்துவமானி ஆய்வுக் கட்டுரை. பேராதனைப் பல்கலைக்கழகம்.

**நேர்காணலின் மூலம் தகவல் பெறப்பட்டவர்கள்**

1. எம்.எச். அப்துல் கபூர் (வயது 66, முகத்தமுஷ் ஷாதுலி , காத்தான்குடி) 13.08.2017
2. அல்ஹாஜ் அச்சி முஹம்மத் (வாழைச்சேனை) 14.02.2018
3. ஏ.ஸீ.எம். அஷ்ர.்.ப் (முகத்தமுஷ் ஷாதுலி, ஏறாவூர்), 14.07.2018
4. மௌலவி ஐ.எல் ஆதம் பாவா (முகத்தமுஷ் ஷாதுலி, வாழைச்சேனை) 14.02.2018
5. கே.எல்.எம். பதுர்தீன் ((வயது 45, முகத்தமுஷ் ஷாதுலி, காத்தான்குடி) 13.08.2017
6. கே.எம்.ஸவ்கத் அலி (வயது 59, முகத்தமுஷ் ஷாதுலி, காத்தான்குடி) 13.08.2017
7. எம்.ஜே.றபியுத்தீன் (முகத்தமுஷ் ஷாதுலி, ஏறாவூர், ஓய்வு பெற்ற அதிபர்), 14.07.2018
8. யூ.எல். தாவூத் வயது 75 – வாழைச்சேனை) 14.02.2018
9. எம்.எம்.ஏ.தாஹா ஹுஸைன் (முகத்தமுஷ் ஷாதுலி ஏறாவூர்) 14.07.2018
10. எம்.ஜுனைத் (முகத்தமுஷ் ஷாதுலி – ஏறாவூர்) 17.07.2018